**ப்ரீபெய்ட் கார்டு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் யாவும், பினோ பேமெண்ட்ஸ்- ஆல் வழங்கப்பட்ட இணை வர்த்தக முத்திரை கொண்ட ப்ரீபெய்ட் பேமெண்ட் கருவிகள்/கார்டுகள் ஆகியவற்றிக்கான ஒழுங்குமுறை படுத்துவதற்க்காகவும், மற்றும் அவை வழங்கப்படும் இணை வர்த்தக தொழில் ஒப்பந்தம் (இணை-பிராண்டிங் பார்ட்னராக) செய்து கொள்ளும் ஃபினோ பேமெண்ட்ஸ்-ஆல் ("வங்கி") அங்கீகரிகப்பட்ட தொழில்நுட்ப சேவை மற்றும் வங்கி தொழில்நுட்பத்துடன் சார்ந்த வங்கி சேவை வழங்குபவர்களுக்குமானது.

ஏதாவது கார்டு-களை பெறுவதற்க்கான பதிவு செயல்முறை முடிப்பதற்கு, நீங்கள், இங்கு கொடுக்கப்பட்டுள்ள தனித்தனியான அனைத்து விதிமுறை மற்றும் நிபந்தனைகளையும் படித்து புரிந்து கொண்டு சம்மதிக்கிறீர்கள் அல்லது உடன்படுகிறீர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படும். அவை இங்கே கொடுக்கப்பட்டுள்ள ப்ரீபெய்ட் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் பெறுவதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன், எங்களின் வலைதளமான https://www.finobank.com - இல் கொடுக்கப்பட்ட அவ்வப்போது திருத்தப்பட்ட பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்கிறீர்கள் என்று கருதப்படும்.

இந்த ஒப்பந்தத்தில் "நாங்கள்","எங்கள்"அல்லது "எங்களுக்கு "என்பன பினோ பேமெண்ட்ஸ் பேங்க் (Fino Payments Bank) - ஐ குறிக்கும் மற்றும் "நீங்கள்", "உங்கள்"அல்லது "உங்களுக்கு"என்பன ப்ரீபெய்ட் கார்டு வாங்குபவர் அல்லது உபயோகிக்கும் நபரை குறிக்கும் (தனி நபர் / கூட்டு)."நாம்", "நமக்கு" என்பன பினோ பேமெண்ட்ஸ் பேங்க் (Fino Payments Bank) – யும் ப்ரீபெய்ட் கார்டு வாங்குபவர் அல்லது உபயோகிக்கும் நபரை (தனி நபர் / கூட்டு) - யும் குறிக்கும் (அல்லது நபர்களை அல்லது நிறுவனத்தை அல்லது அங்கீகரிக்க பட்ட நபர்/நபர்கள்).

**வரையறை/வரை முறைகள்:**

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் எதிர்நோக்கம்/ முரண்பாடு மற்றும்/அல்லது வரையறுக்கப்பட்ட சொற்களுக்கோ அல்லது வார்த்தைகளுக்கோ தெளிவு வேண்டுமெனில், விதிமுறைகளில் இதன் மூலமாக குறிப்பிடப்பட்டுள்ளது: (i) மேற்கோள்களில் மற்றும் / அல்லது அடைப்புக்குறிக்குள் அதற்க்கான விளக்கங்கள் அல்லது அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது; மற்றும் (ii) பின்வரும் விதிமுறைகள் அவற்றிற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள அர்த்தங்களைக் கொண்டிருக்கும்; "கணக்கு(Account)" என்பது PPIகளில் உள்ள வரம்புகளைக் கண்காணிக்கும் நோக்கத்திற்காக, PPIகளில் ஏற்றப்பட்ட தொகைக்கு சமமான கணக்கு இருப்பைக் கொண்ட ப்ரீபெய்ட் கணக்கைக் குறிக்கிறது.

- "வணிக நாள்" என்பது, மாதங்களில் வரும் ஞாயிறு, இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகள், பொது விடுமுறைகள் அதாவது மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881(26/1881) பிரிவு 25 இன் படி வங்கி வர்த்தக பரிவர்த்தனைக்களுக்காக செயல்படும் அல்லாத நாட்களை குறிக்கும்.
- "கட்டணங்கள்" என்பது, PPI-களின் பயன்பாட்டிற்காக எங்களால் வசூல் செய்யப்படும் வரிகள், கருவிகளுக்கான செலவுகள் மற்றும் அதற்க்கான கட்டணங்கள் ஆகியவற்றை குறிக்கும்.
- "வாடிக்கையாளர்" அல்லது "உடைமையாளர் "அல்லது "நீங்கள்" என்பது PPI-கள் வழங்குபவபர்களிடமிருந்து வாங்கும் அல்லது பெறும் தனி நபர்கள்/நிறுவனங்கள்/PPI இல் சேமிக்கப்பட்ட மதிப்புக்கு நிகராக அதை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அங்கீகரிக்கப்பட்டவர்.
- "வாடிக்கையாளர் சேவை மையம்" என்பது வடிக்கையாளர்களால் எழுப்பப்படும் PPI-தொடர்பான புகார்களை நிர்வகிக்கவும் மற்றும் கேள்விகள், சந்தேகங்கள், உதவிகளுக்கு உதவவும் எங்களால் ஏற்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பு மையத்தை குறிக்கிறது.
- "EDC" அல்லது "எலக்ட்ரானிக் டேட்டா கேப்சர்" மெஷின் என்பது டெர்மினல், பிரிண்டர், பிற புற மற்றும் துணை மற்றும் பிபிஜ மூலமாக ஸ்வைப் செய்ய அல்லது பரிவர்த்தனையைத் தொடங்கப் பயன்படுத்தப்படும் ஒரு மென்பொருள்.
- "இன்டர்நெட் பேமெண்ட் கேட்வே" என்பது, எங்களால் நெறிமுறைமுறைப்படுத்தப்பட்ட, வாடிக்கையாளரின் அங்கீகாரத்தின் பேரில் இணையம் மூலமாக PPI ஐப் பயன்படுத்தி செய்யப்படும் பரிவர்த்தனைகளை அங்கீகரிக்கும் முறை.
- "KYC (KNOW YOUR CUSTOMER)" என்பது, அவ்வப்போது இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க, வாடிக்கையாளரை அடையாளம் கண்டுகொள்வதற்கும், உங்களின் விவரங்களை சரிபார்ப்பதற்காக "உங்கள் வாடிக்கையாளர்" என்ற எங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டுதல் முறை.

- "வணிக நிறுவனங்கள்” என்பது PPI-ஐ ஏற்றுக்கொள்ளக்கூடிய, அசையாத கட்டிடங்கள்/கடைகள் (இஸ்தாபனம், கடைகள், உணவகங்கள், ஹோட்டல்கள் போன்றவை உட்பட ஆனால் அவை மட்டும் அல்ல) மற்றும் மாற்றி நிறுவக்கூடிய/அமைக்கக்கூடிய கடைகள்/இஸ்தாபனங்கள் (மின்வணிக தளங்கள், டிஜிட்டல் சந்தைகள் போன்றவை உட்பட ஆனால் அவை மட்டும் அல்லாமல் எந்த வகையான மின்னணு வடிவத்திலுமான கடைகள்) இந்தியாவில் இருக்க கூடிய மற்றும் எங்களுடன் குறிப்பிட்ட வர்த்தக ஒப்பந்தம் வைத்திருக்கும் (அல்லது கட்டணங்கள்/நிதி வாங்கும் அல்லது திரட்டும்/நிதி அல்லது கட்டணங்கள் பரிவர்த்தனைக்கான நுழைவுவாயில் / கார்டு நெட்வொர்க்) அமைப்பை/நிறுவனத்தை/கடையை/தளத்தை குறிக்கும்.
- "கட்டணச் சேனல்/கட்டணங்கள் செலுத்தும் வழி” என்பது EDC/POS டெர்மினல்கள்/கியோஸ்க்கள்/இணைய வழி கட்டண நுழைவாயில்/மொபைல் அடிப்படையிலான கட்டண செலுத்தும் முறைகள் மற்றும் எங்களால் அவ்வப்போது தெரிவிக்கப்படும் பல்வேறு விதமான பரிவர்த்தனைகள் செலுத்தும் முறைகள் உட்பட பல்வேறு பரிவர்த்தனை முறைகளைக் குறிக்கும்.
- “தனிப்பட்ட அடையாள எண் (PIN)” என்பது வாடிக்கையாளருக்கு நாங்கள் PPI வழங்கும் போது வழங்கப்படும் எண்களால் ஆன கடவுச்சொல்.
- "POS” அல்லது "Point of Sale” என்பது இந்தியாவில் உள்ள வணிக நிறுவனங்களால் பராமரிக்கப்படும் மின்னணு முனையங்களைக் குறிக்கிறது, அதில் வாடிக்கையாளர் PPI ஐப் பயன்படுத்தலாம்.
- "ப்ரீபெய்டு இன்ஸ்ட்ரூமெண்ட்” (பிபிஐ) என்பது ப்ரீபெய்டு கருவியைக் குறிக்கும், இதில் கிஃப்ட் கார்டுகள் மற்றும் உணவு அட்டைகள் ஆகியவை அடங்கும், இது விதிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ள பிபிஐகளில் சேமிக்கப்பட்ட மதிப்புக்கு எதிராக வாங்குவதற்கு உதவுகிறது.
- "விதிமுறைகள்” என்பது, இந்திய ரிசர்வ் வங்கி அல்லது இந்தியாவில் ப்ரீபெய்ட் கட்டணக் கருவிகளை வழங்குதல் மற்றும் செயல்படுத்துவது தொடர்பான வேறு ஏதேனும் தகுதிவாய்ந்த அதிகாரத்தால் வழங்கப்பட்ட முதன்மை விதிகள்/வழிமுறைகள், சுற்றறிக்கைகள், அறிவிப்புகள், விதிகள், வழிகாட்டுதல்கள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றைக் குறிக்கும்..
- “கட்டண அட்டவணை” என்பது எங்களால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் மற்றும் எங்கள் இணையதளத்தில் காட்டப்படும் கட்டணங்கள் அல்லது கட்டணங்களின் விவரங்களைக் குறிக்கும்.
- "பரிவர்த்தனை” என்பது எந்தவொரு வணிக நிறுவனத்திலும் PPI ஐப் பயன்படுத்தி வாடிக்கையாளரால் தொடங்கப்படும் எந்தவொரு பரிவர்த்தனையையும் குறிக்கிறது.
- “ஃபினோ பேமெண்ட்ஸ் பேங்க்” அல்லது “வழங்குபவர்” என்பது ஃபினோ பேமெண்ட்ஸ் பேங்க் லிமிடெட் என்ற வங்கி நிறுவனத்தைக் குறிக்கும், இந்திய நிறுவன சட்டம் 2013 படி மைண்ட்ஸ்பேஸ் ஜூய்நகர், பிளாட் எண் 2/1/F, டவர் 1, 8வது மாடியில் TTC இண்டஸ்ட்ரியல் ஏரியா, MIDC ஷிர்வானே, ஜூய்நகர், நவி மும்பை - 400 706 (Mindspace Juinagar, Plot No Gen 2/1/F, Tower 1, 8th Floor, TTC Industrial Area, MIDC Shirwane, Juinagar, Navi Mumbai - 400 706) என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட ஒரு வங்கி நிறுவனமாகும்.
- “வரம்புகள் முதன்மை விதிகளின்படி கருவிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புகள் (மேலும் அதன் உட்சபட்ச மதிப்பு உட்பட) அனைத்தும் இந்திய ரூபாய்களில் கொடுக்கப்பட்டுள்ளது. அவை குறிப்பிட்ட மதிப்பின் அடைப்படையில் (வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால்) வாடிக்கையாளர்- களுக்கு கொடுக்கப்படலாம்.
- "கோ-பிராண்டிங் பார்ட்னர்”என்பது, நிறுவனங்கள் சட்டம், 1956/ கம்பெனிகள் சட்டம், 2013 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட இந்திய நிறுவனமாகவும் மற்றும் ப்ரீபெய்ட் கருவிகளை வழங்குவதற்கு இணை-பிராண்டிங் பார்ட்னராக செயல்பட ஃபினோ பேமெண்ட்ஸ் வங்கியுடன் தனி ஏற்பாட்டைக் கொண்ட நிறுவனம் என்று பொருள்படும்.

**தகுதி வரம்பு:**

- தனிநபர் (நபர்கள்)/நிறுவனம் (நிறுவனங்கள்) மட்டுமே, சட்டப் பிணைப்பு ஒப்பந்தத்தில் இணைய தகுதியானவர் (கள்) /தகுதியானவை என கருதப்படுகிறது. அவர்கள் கார்டு-களை பயன்படுத்தி இந்தியாவில் மட்டும் இந்திய ரூபாய் மதிப்பில் மட்டும் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளலாம்/மேற்கொள்ளமுடியும்.
- கார்டை பதிவு செய்வதற்கும், உருவாக்குவதற்கும், பயன்படுத்துவதற்கும், கார்டுதாரரின் பெயர், முகவரி, மொபைல் ஃபோன் எண், மின்னஞ்சல் ஆகியவை உட்பட, அட்டைதாரரின் சில தனிப்பட்ட தகவல்களைச் சமர்ப்பிக்க, இணை பிராண்டிங் பார்ட்னரை (வணிக நிருபர்-

ஐ) வங்கி கோரலாம். முகவரி, பிறந்த தேதி, விருப்பமான தொடர்பு மொழி போன்றவை வங்கிக்கு, கார்ப்பரேட் கார்டுதாரரின் தகவல்களை வங்கியுடன் பகிர்ந்து கொள்வதற்கு கார்டுதாரரின் ஒப்புதல் தேவை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- எந்தவொரு தனிநபரும் அல்லது நிறுவனமும் அதன் அடையாளம், வயது, பிற குடும்ப உறுப்பினர்கள்,பெற்றோர், வசிப்பிடம், உடைமை, வணிகம் தொடர்பான தகவல்கள் மற்றும் அல்லது பிற தகவல்கள், இந்தியாவின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் அத்தகைய தகவல்கள் இந்தியாவின் எந்தவொரு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் பிற தகவல்களையும் தவறாகக் குறிப்பிடக்கூடாது. அத்தகைய தகவல்கள், வேண்டுமென்றோ அல்லது தற்செயலாகவோ குறிப்பிட்டால், அதன் மூலம் PPI களை தவறாகப் பயன்படுத்தபட்டால் இந்தியாவின் எந்தவொரு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைச் செயல்பாடுகளின் படி நடவடிவகை எடுக்கப்படும்.
- அட்டை வைத்திருப்பவரின் அடையாளத்தை சரிபார்க்க/அங்கீகரிக்க மேலும் அது தொடர்பாகவோ வேறு ஏதும் வங்கிக்கு தேவைப்பட்டாலோ அதற்காக வங்கி மேலும் விசாரணைகளை மேற்கொள்ளலாம். இது சம்பந்தமாக, கார்ப்பரேட்/கார்டுதாரரின் தனிப்பட்ட தகவல்கள் எல்லா நேரங்களிலும் உண்மையாகவும், துல்லியமாகவும், சரியானதாகவும், முழுமையானதாகவும் இருப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு உள்ளது. எனவே கார்போரேட் / அல்லது கார்டு ஹோல்டர் போன்றோரின் தனிப்பட்ட அல்லது வங்கிக்கு தேவைப்படும் தகவல்கள் அனைத்தையும் துல்லியமாகவும் உண்மைத்தன்மையுடனும் இருப்பதையும் வங்கியுடன் பகிர மற்றும் சேகரித்து வைக்க / வைத்துக்கொள்ள நாங்கள் உறுதிப்படுத்திக்கொள்கிறோம்.

**பிபிஐ வழங்கல் மற்றும் பயன்பாடு:**

- பிபிஐ, வழங்குபவரின் பிரத்யேக சொத்தாக இருக்கும்.
- பிபிஐ இந்திய (அரசியல்) எல்லைக்குள் மட்டுமே செல்லுபடியாகும் மற்றும் இந்திய ரூபாயில் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்கிறோம். இந்தியாவின் எல்லைக்கு வெளியே அல்லது வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்படும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் PPI ஐப் பயன்படுத்த முடியாது.
- வாடிக்கையாளர், பிபிஐயின் மறுபக்கத்தில் (பிபிஐ கார்டு வடிவத்தில் இருந்தால்) உள்ள அதன் ரசீது போன்ற இடத்தில் பெற்றுக்கொண்ட பின் உடனடியாக கையொப்பமிட வேண்டும். கையொப்பம் இல்லாத அல்லது கையொப்பம் பொருந்தாத பட்சத்தில், வாடிக்கையாளருக்கு அறிவிப்போ அல்லது முன் அறிவிப்பின்றி எந்தவொரு பரிவர்த்தனையையும் நிராகரிக்க அல்லது ரத்து செய்ய எங்களுக்கு மேலதிக உரிமை உள்ளது.
- எந்தவொரு சூழ்நிலையிலும் பிபிஐ-ஐ மற்ற தனிநபர் அல்லது மூன்றாம் தரப்பினருக்கு மாற்றப்படக் கூடாது அல்லது உபயோக படுத்த கொடுக்கக்கூடாது.
- எந்த ஒரு சூழ்நிலையிலும் / சந்தர்ப்பங்களிலும் PPI இல் பராமரிக்கப்படும் மதிப்பிற்க்கு அல்லது எந்தவொரு இருப்புக்கும் நாங்கள் எந்த வட்டியையும் செலுத்த வேண்டியதில்லை.
- எந்தவொரு சூழ்நிலையிலும் வாடிக்கையாளரால் எந்தவொரு உறவினர் அல்லது குடும்ப உறுப்பினர்கள் அல்லது மூன்றாம் தரப்பினருக்கு PIN தெரிவிக்கப்படாது அல்லது பகிரப்பட மாட்டாது என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்துகிறார் அல்லது உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிக்கிறோம். அங்கீகரிக்கப்படாத PIN-ஐ வெளிப்படுத்தல் மற்றும்/அல்லது PPI இன் அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டினால் ஏற்படும் விளைவுகளுக்கு வாடிக்கையாளர் மட்டுமே பொறுப்பு மற்றும் பொறுப்பாவார்.
- PPI இன் அங்கீகரிக்கப்படாத பயன்பாடு மற்றும்/அல்லது எந்த இழப்பு அல்லது சேதம், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, அத்தகைய தவறான பயன்பாட்டின் விளைவாக வாடிக்கையாளரால் ஏற்பட்டால் அல்லது அது தொடர்பாக எழும் அனைத்து பொறுப்பு மற்றும் பொறுப்புகளை நாங்கள் நிராகரிக்கிறோம். வாடிக்கையாளர் பின் (PIN/கடவுச்சொல்) -ஐ மறந்துவிட்டாலோ அல்லது தவறவிட்டாலோ, வாடிக்கையாளர் இணையதளம் அல்லது மொபைல் பயன்பாடு அல்லது பின்/கடவுச்சொல் (PIN) ஐ மீண்டும் உருவாக்க எங்களால் கிடைக்கக்கூடிய வேறு ஏதேனும் பயன்பாட்டு அல்லது செயல்முறையை பார்வையிட அல்லது பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
- வாடிக்கையாளர், PPI இல் கிடைக்கும் முழு வரவு/நிலுவையைப் அல்லது இருப்பையும் அதன் காலாவதியாகும் தேதி அல்லது காலவரையறை முன்பாக பயன்படுத்த வேண்டும். செல்லுபடியாகும் காலத்திற்குள் வாடிக்கையாளர் PPI-இல் கிடைக்கும் முழு வரவு/நிலுவையைப் அல்லது இருப்பையும் அல்லது கிரெடிட் நிலுவையைப் பயன்படுத்தவில்லை என்றால், வாடிக்கையாளர் PPI-ஐ புதுப்பிப்பதற்கு எங்களை

அணுகலாம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வாடிக்கையாளர் எங்களை அணுகவில்லை என்றால், PPI இல் உள்ள நிலுவையிலுள்ள கடன் இருப்பு (-கள்) விதிமுறைகளுக்கு இணங்க நிதிக்கு மாற்றப்படும்.

- 10 ஆண்டுகளுக்கும் மேலாக கார்டில் உள்ள கோரப்படாத அல்லது பயன்படுத்தப்படாத அல்லது உரிமை கோரப்படாத இருப்புத் தொகையை RBI/2013-14/527 DBOD.No.DEAF Cell.BC.101/30.01.002/2013-14 இன் படி, டெபாசிட்டர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிதிக்கு (DEAF) மாற்றப்படும் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்துகிறார்.
- ஒரு வணிக நிறுவனத்தில் முடிக்கப்பட்ட ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் பின் உருவாக்கப்படும் அனைத்து கட்டணச் சீட்டுகளிலும் அல்லது ரசீதுகளில் வாடிக்கையாளர் கையொப்பமிட்டுத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். கட்டணச் சீட்டுகள் அல்லது பரிவர்த்தனை சீட்டுகளின் நகல்களை வாடிக்கையாளருக்கு வழங்க நாங்கள் கடமைப்பட்டிருக்க மாட்டோம். அப்படி ஏதேனும் அத்தகைய கோரிக்கைகள் பரிவர்த்தனை தேதியிலிருந்து நாற்பத்தைந்து (45) வணிக நாட்களுக்குள் வாடிக்கையாளர்களால் செய்யப்பட்டிருந்தால் எங்கள் சொந்த விருப்பப்படி மட்டுமே வழங்கப்படும். கட்டணம் அல்லது பரிவர்த்தனை சீட்டுகளின் நகல்களை வழங்குவதற்கு கூடுதல் கட்டணம் அல்லது கட்டணத்தை வசூலிக்க எங்களுக்கு உரிமை உண்டு என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார் அல்லது உறுதியேற்கிறார்.
- எந்தவொரு பரிவர்த்தனை தொடர்பாகவும் வணிக ஸ்தாபனத்தால் விதிக்கப்படும் எந்தவொரு கட்டணமும் அல்லது செலவும் வாடிக்கையாளரால் வணிக ஸ்தாபனத்துடன் நேரடியாகத் தீர்க்கப்பட வேண்டும். வணிக நிறுவனம் அல்லது பரிவர்த்தனை தொடர்பாக அவர்களால் விதிக்கப்படும் கட்டணங்கள் அல்லது செலவுகளுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நாங்கள் பொறுப்பாகவோ அல்லது பொறுப்பாளராகவோ இருக்க மாட்டோம்.
- சாதனப் பிழை (கருவி பிழை) அல்லது தகவல்தொடர்பு இணைப்பின் பிழை காரணமாக ஏதேனும் வணிக நிறுவனங்களின் அனைத்துத் திரும்பப்பெறுதல்களும், சரிசெய்தல்களும் கைமுறையாகச் (கணினி செயல் முறை அல்லாமல்) செயல்படுத்தப்பட்டு மற்றும் எங்கள் உள் கொள்கைகளுக்கு இணங்க மற்றும் பொருந்தக்கூடிய விதிகள், ஒழுங்குமுறைகளின் படி எங்களால் உரிய சரிபார்ப்புக்குப் பிறகு கணக்கில் வரவு வைக்கப்படும். எங்களால் பரிசீலிக்கப்படும் எந்தவொரு சர்ச்சைக்குரிய தொகையையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், கணக்கில் இருக்கும் கிரெடிட் நிலுவையின் அடிப்படையில் மட்டுமே எந்தவொரு அடுத்தடுத்த பரிவர்த்தனைகளும் ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது மதிக்கப்படும் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். கணக்கில் போதுமான பணம் இல்லாமல், பணம் செலுத்தும் வழிமுறைகளை அவமதிப்பதன் மூலம், எங்களுக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு எதிராக வாடிக்கையாளர் நிபந்தனையின்றி எங்களுக்கு இழப்பீடு வழங்குவார். எங்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதத்தின் தொகையை நேரடியாக கணக்கிலிருந்து கழிக்க எங்களுக்கு உரிமை உண்டு என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார் அல்லது உறுதியேற்கிறார்.
- பிபிஜயின் அனைத்து பரிவர்த்தனைகள் தொடர்பாகவும் வாடிக்கையாளர் எல்லா நேரங்களிலும் நல்ல நம்பிக்கையுடன் செயல்பட உறுதியளிக்கிறார். இதில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முரணாக PPI-இன் எந்தவொரு சட்டவிரோத அல்லது தவறான பயன்பாட்டிற்கான முழுப் பொறுப்பையும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார் அல்லது உறுதியேற்கிறார்..
- இந்திய சட்ட திட்ட விதிகளின் கீழ் சட்டவிரோதமான எந்தவொரு பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டணத்தை (களை) செலுத்துவதற்கு PPI-ஐப் பயன்படுத்த வேண்டாம் என்று வாடிக்கையாளர் இதன்மூலம் ஒப்புக்கொள்கிறார். லாட்டரி சீட்டுகள் போன்ற தடைசெய்யப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட பத்திரிகைகள், ஸ்வீப்ஸ்டேக்குகளில் பங்கேற்பது, பிட்காயின்கள் வாங்குதல், கால் பேக் சேவைகளுக்கான கட்டணம் போன்ற தடைசெய்யப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை வாங்குவதற்கு PPIஐப் பயன்படுத்த கூடாது என்பதையும் ஒப்புக்கொள்கிறார் அல்லது உறுதியேற்கிறார்.
- வணிக நிறுவனத்தால் வழங்கப்படும் சேவை, பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம், வணிக ஸ்தாபனத்தால் பிபிஜ ஏற்க மறுப்பது மற்றும் இயலாமை தொடர்பாக வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட இழப்பு, சேதம் அல்லது காயங்களுக்கு நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம். தொழில்நுட்ப சிக்கல்கள் போன்றவற்றால் வணிக நிறுவனத்தில் பிபிஜ பயன்படுத்த மறுத்தாலோ அதற்கு நங்கள் பொறுப்பேற்க மாட்டோம்.

- பிபிஜயின் செல்லுபடியாகும் தன்மைக்கு உட்பட்டு, பிபிஜயில் தொடர்ச்சியாக ஒரு (1) வருடத்திற்கு எந்தப் பரிவர்த்தனையும் இல்லை என்றால், வாடிக்கையாளருக்கு அறிவிப்பை அனுப்பிய பிறகு, எங்களால் அது செயலற்றதாக்கப்படும் என்பதை வாடிக்கையாளர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார் மற்றும் புரிந்துகொள்கிறார். அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்டபடி, சரிபார்ப்புகள் மற்றும் தேவையான விடாமுயற்சிக்குப் பிறகு மட்டுமே எங்களால் பிபிஜ மீண்டும் செயல்படுத்தப்படும்.
- PPI-ஐப் பயன்படுத்தி செய்யப்படும் அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் எங்களிடமிருந்து குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (Email) விழிப்பூட்டல்களைப் பெற வாடிக்கையாளர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார். எங்களிடமிருந்து வரும் எஸ்எம்எஸ் அல்லது மின்னஞ்சல் விழிப்பூட்டல்கள் டெபிட் மற்றும் கிரெடிட் பரிவர்த்தனைகள், பிபிஜயில் இருக்கும் அல்லது அதில் உள்ள மீதமுள்ளவை பற்றியும் அல்லது எங்களால் அவ்வப்போது குறிப்பிடும் நிர்ணயிக்கப்பட்ட பிற தகவல்கள் அல்லது விவரங்களை உள்ளடக்கி இருக்கும்.
- பிபிஜ தொடர்பான சேவைகளை வழங்குவதற்கு, எங்கள் சொந்த விருப்பத்தின் பேரில், தேவைப்படும் அல்லது அவசியமான விதிமுறைகளில் வெளிப்புற சேவை வழங்குநர்(கள்) அல்லது முகவர்(கள்) சேவைகளைப் பயன்படுத்தலாம் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். அதை பற்றி மேலும் தெரிந்து கொள்ள அல்லது கேட்க, எங்களால் அவ்வப்போது எங்கள் இணையதளத்தில் பதிவேற்றப்படும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை ("FAQ") வாடிக்கையாளர்கள் அணுக வேண்டும்.

**மீறல்:**

- வாடிக்கையாளரால் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில், எங்களுக்கு எதிராக எந்தவொரு பொறுப்பு, உரிமைகோரல், கோரிக்கை அல்லது தகராறு இல்லாமல் பிபிஜயை உடனடியாக ரத்து செய்ய அல்லது நிறுத்த எங்களுக்கு முழு உரிமை உண்டு.
- எந்தவொரு செயலின் விளைவாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்களுக்கு நேரிடும் மற்றும்/அல்லது பாதிக்கப்படக்கூடிய இழப்பு, சேதம், உரிமைகோரல், அபராதம், செலவு, கட்டணங்கள் அல்லது செலவுகள் (சட்ட ஆலோசகர் கட்டணம் உட்பட) ஆகியவற்றிற்கு எங்களுக்கு இழப்பீடு வழங்க வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். மேலும் அத்தகைய செயல்களான புறக்கணிப்பு அல்லது கமிஷன், மோசடி, அலட்சியம் அல்லது இயல்புநிலை அல்லது எந்தவகையான விதிகள் மற்றும் நிபந்தனைகள் மீறிய செயல்கள் மூலமாகவோ நடந்தாலும் இழப்பீடு வழங்க PPI வாடிக்கையாளர் அல்லது வைத்திருப்பவர் என்ற முறையில் ஒப்புக்கொள்கிறார் அல்லது உறுதிப்படுத்துகிறார்.

**கால மற்றும் முடிவு:**

- PPI இன் முகப்பில் அச்சிடப்பட்ட காலாவதி தேதி வரை PPI செல்லுபடியாகும்.

  b) PPI காலாவதியாகும் போது அதை அழிக்க வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார்.
- மேல் வலது மூலையை வெட்டப்பட்டு துண்டிப்பதன் மூலம் ஹாலோகிராம் மற்றும் மேக்னடிக் ஸ்ட்ரிப் இரண்டும் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டதாகவோ அல்லது எங்களால் மீண்டும் திருப்பி பெறப்பட்டது என்பதை உறுதி செய்யும் முறையிலோ, பிபிஜ சிதைக்கப்படும் அல்லது அழிக்கப்படும் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். வாடிக்கையாளர் PPI-ஐ அழித்துவிட்டாரா அல்லது அழித்ததாகக் கூறினாலும், அது நிறுத்தப்படுவதற்கு முன்பு PPI மீது ஏற்படும் எந்தவொரு கட்டணங்களுக்கும் வாடிக்கையாளர் தொடர்ந்து பொறுப்பேற்க வேண்டும் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார் அல்லது உறுதிப்படுத்துகிறார்.
- பின்வருவனவற்றில் நாங்கள் எங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் PPI-ஐ நிறுத்தலாம்:
  - வாடிக்கையாளர் திவாலானவராக அல்லது வாடிக்கையாளர் மரணம் என்று அறிவிக்கப்பட்டால் (அரசாங்கத்தால் அல்லது ஏதேனும் ஒரு அரசு சார்ந்த அதிகாரப்பூர்மான அமைப்பு அல்லது நிறுவனம்).
  - வாடிக்கையாளர், விதிமுறை மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது மேற்பட்ட விதிமுறைகளில் ஈடுபட்டாலோ, விதிமுறை மற்றும் நிபந்தனைகளில் இருக்கும் கடமைகளில் ஏதேனும் ஒன்றின் அல்லது அதற்கு மேற்பட்டவைகளிலிருந்து தவறும் பட்சத்தில்.
  - வாடிக்கையாளருக்கு ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் உத்தரவு அல்லது இந்தியாவில் உள்ள எந்தவொரு ஒழுங்குமுறை அல்லது சட்டப்பூர்வ ஆணையம்

அல்லது எந்த விசாரணை நிறுவனமும் வழங்கிய உத்தரவு மூலம் எந்தவொரு கட்டுப்பாடும் விதிக்கப்பட்டால்.
    - இந்த செயல் திட்டத்தில் அல்லது முறைகளில், செயல்களாகவோ அல்லது நடவடிக்கைகளாகவோ அல்லது இதன் ஏதேனும் ஒரு வடிவத்திலோ இந்திய அல்லது எங்களின் சட்டத்திட்டதிற்கு எதிராகவோ நடந்தால் அல்லது செயல்படுத்தினால் உடனடியாக நிறுத்தப்படும்.
- எங்களின் சொந்த விருப்பத்தின் பேரில், PPI மீதான சலுகைகளை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ திரும்பப் பெறுவதற்கும் மற்றும்/அல்லது எந்த நேரத்திலும் எந்த அறிவிப்பும் அல்லது எந்த காரணத்தையும் தெரிவிக்காமல் PPI-ஐ நிறுத்துவதற்கும் எங்களுக்கு உரிமை உள்ளது. தற்காலிகமாக திரும்பப் பெறப்பட்டால் அல்லது நிரந்தரமாக திரும்பப் பெறப்பட்டால் PPI உடன் இணைக்கப்பட்ட சலுகைகள் எங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் எங்களால் மீட்டெடுக்கப்படும் முறையில் பிபிஐ-ஐ நிரந்தரமாக ரத்து செய்ய எங்களுக்கு உரிமை உண்டு. எப்படியாயினும், திரும்பப் பெறுவது (தற்காலிக அல்லது நிரந்தரமாக) PPI உடன் இணைக்கப்பட்ட அனைத்து நன்மைகள், சலுகைகள் மற்றும் சேவைகளை தானாக திரும்பப் பெறுவதாகும் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிபிஐ தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ திரும்பப் பெறப்பட்டால், எங்களால் குறிப்பிடப்படும் வரையில், திரும்பப் பெறுவதற்கு முன்பு பிபிஐ மீது விதிக்கப்படும் அனைத்து கட்டணங்களுக்கும் வாடிக்கையாளர் தொடர்ந்து முழுமையாகப் பொறுப்பாவார் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார்.
- நாங்கள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ, பிபிஐ மீதான சலுகைகளைத் திரும்பப் பெற்றால் அல்லது பிபிஐயை நிறுத்தினால், அனைத்து விதமான முயற்சியின் அடிப்படையில், வாடிக்கையாளருக்கு உடனடியாகத் தெரிவிப்போம். அத்தகைய அறிவிப்பைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்கள் அல்லது குறைபாடுகளுக்கு நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம்.
- மேலே கூறப்பட்டுள்ளபடி பிபிஐ முடிவடையும் பட்சத்தில், கணக்கில் ஏதேனும் இருந்தால் மீதித் தொகையானது மூலத்திற்குத்/உற்பத்தி ஸ்தானதிற்க்கு திருப்பித் தரப்படும்.

**கட்டணங்கள்:**

- கட்டணங்கள் கீழ் கண்டவைகளாக அடங்கும்:
    - பிபிஐ தொடர்பாக எங்களால் வசூலிக்கப்படும் கட்டணங்கள், மாற்றுதல், புதுப்பித்தல், கையாளுதல் மற்றும் பிற கட்டணங்கள் ஏதேனும் இருந்தால்,
    - குறிப்பிட்ட வகையான பரிவர்த்தனைகளுக்கான சேவைக் கட்டணங்கள். அத்தகைய கட்டணங்களை கணக்கிடும் முறை அவ்வப்போது அறிவிக்கப்படும் கட்டணங்கள்.
    - கட்டணங்கள் திரும்பப் பெற முடியாதவை, மாற்ற முடியாதவை மற்றும் ஒதுக்க முடியாதவை.
    - அனைத்து கட்டணங்களும், வெளிப்படையான பிழை இல்லாத நிலையில், இறுதியானது மற்றும் வாடிக்கையாளரைக் கட்டுப்படுத்தும் மற்றும் இயற்கையில் தீர்க்கமானதாக இருக்கும்.
    - இந்திய அரசு அல்லது பிற தகுதிவாய்ந்த அதிகாரிகளால் பிபிஐ தொடர்பாக விதிக்கப்படும் எந்தவொரு சரக்கு மற்றும் சேவை வரி உட்பட அனைத்து சட்டப்பூர்வ வரிகள், வரிகள் (எந்தவொரு விளக்கமும்) அல்லது அதன் தொடர்பாக அவ்வப்போது விதிக்கப்படும் வரிகள் அனைத்தும் வாடிக்கையாளர் மீது சுமத்தப்படும் அல்லது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

**இழந்த/தொலைந்துபோன/தவறி விடப்பட்ட, திருடப்பட்ட அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்ட பிபிஐ:**

- PPI தொலைந்துவிட்டாலோ அல்லது திருடப்பட்டாலோ, வாடிக்கையாளர் அத்தகைய இழப்பு அல்லது திருட்டு குறித்து வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்திற்கு/ மையத்தின் மூலம் உடனடியாகப் புகாரளித்து, PPI ஐ உடனடியாக நிறுத்தி வைக்கவுமாறு அல்லது தடுக்குமாறு கோர வேண்டும்.
- ஒருமுறை PPI தொலைந்துவிட்டதாகவோ, திருடப்பட்டதாகவோ அல்லது சேதமடைந்ததாகவோ புகாரளிக்கப்பட்டால், அதன் பிறகு கண்டுபிடிக்கப்பட்டாலும், அத்தகைய PPI-ஐ மீண்டும் பயன்படுத்த முடியாது என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார்.
- PPI இன் பாதுகாப்பிற்கு வாடிக்கையாளரே முழுத் தார்மீக பொறுப்பு மற்றும் PPI தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ளபடி வாடிக்கையாளர் அத்தகைய பொறுப்பை

புறக்கணித்துள்ளார் அல்லது மறுத்துவிட்டார் அல்லது நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார் அல்லது PPI இன் இழப்பு, திருட்டு அல்லது அழிவு போன்ற /ஆகிய தகவலை நாங்கள் கண்டறிந்தாலோ அல்லது பெறபெற்றாலோ, அத்தகைய PPI-ஐ ரத்து செய்ய அல்லது முடக்க அல்லது நிறுத்துவதற்கான முழு உரிமை எங்களுக்கு உள்ளது.

- வாடிக்கையாளரால் பிபிஐ தொலைந்துவிட்டதாகவோ, திருடப்பட்டதாகவோ அல்லது சேதப்படுத்தப்பட்டதாகவோ புகாரளிக்கப்பட்ட பிறகு, பிபிஐயில் செய்யப்படும் எந்தவொரு அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளுக்கும் வாடிக்கையாளர் மீது எந்தப் பொறுப்பும் ஏற்படாது. வாடிக்கையாளரால் புகாரளிக்கப்பட்ட பிந்தைய பிபிஐ மீது திரட்டப்பட்ட அனைத்து பொறுப்புகளும் எங்களால் ஏற்கப்படும். எவ்வாறாயினும், PPI இன் மீது தொலைந்து போனது, திருடப்பட்டது அல்லது தவறாகப் பயன்படுத்தப்பட்டது எனப் புகாரளித்த அல்லது புகாரளிக்கும் நேரம் மற்றும்/ அல்லது பரிவர்த்தனை-(கள்) தொடர்பாகவோ அல்லது அதன் பரிவர்த்தனை நடந்த நேரங்களில் ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால், எங்களின் அனைத்து முடிவுகளும் இறுதியானது மற்றும் வாடிக்கையாளரைக் கட்டுப்படுத்தும்.

**பொறுப்பு விலக்கு:**

இந்த ஏற்பாட்டுடன் தொடர்புடைய எந்த ஒரு சிறப்பு, மறைமுக, தற்செயலான, பின்விளைவு, தண்டனை அல்லது முன்மாதிரியான இழப்பு அல்லது சேதம் உட்பட, ஆனால் அது மட்டுப்படுத்தப்படாமல், இந்த ஏற்பாட்டுடன் தொடர்புடைய, வாடிக்கையாளர் அல்லது எந்த மூன்றாம் தரப்பினருக்கும் நாங்கள் பொறுப்பு அல்லது பொறுப்பாக அல்லது பொறுப்பேற்க மாட்டோம்.

**சர்ச்சைக்குரிய பரிவர்த்தனைகள்:**

- PPI தொலைந்து விட்டது, திருடபட்டுவிட்டது அல்லது மோசடி நடந்துவிட்டது என்று வாடிக்கையாளரால் சான்றளிக்கப்பட்டால் தவிர, கட்டணம் சீட்டு அல்லது பரிவர்த்தனை சீட்டு அல்லது பணம் செலுத்தியதற்காக ரசீது மற்றும் எங்களால் பெறப்பட்ட பிற கட்டணக் கோரிக்கைகள் ஆகியவைகள் அத்தகைய கட்டணத்திற்கான/பரிவர்த்தனைக்கான உறுதியான ஆதாரமாக இருக்கும்.
- பிபிஐ தொடர்பான அனைத்து சர்ச்சைக்குரிய பரிவர்த்தனைகளுக்கும், சர்ச்சைக்குரிய பரிவர்த்தனையின் தேதியிலிருந்து பதினைந்து (15) வணிக நாட்களுக்குள் எங்கள் வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் மூலமாக புகார் அல்லது கோரிக்கைகள் எழுப்பப்பட வேண்டும். சர்ச்சைக்குரிய பரிவர்த்தனை தேதியிலிருந்து பதினைந்து (15) வணிக நாட்களுக்குப் பிறகு எந்தவொரு கோரிக்கையும் எங்களால் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை வாடிக்கையாளர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார்.

**பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம்:**

வாங்கப்பட்ட பொருட்கள் அல்லது கிடைக்கும் சேவைகள் தொடர்பான எந்தவொரு வணிக நிறுவனத்துடனான எந்தவொரு சர்ச்சையும் அல்லது புகாரும் வாடிக்கையாளர் வணிக நிறுவனத்துடன் நேரடியாக தீர்க்கப்பட வேண்டும்.

**வெளிப்பாடுகள்/ வெளிப்படுத்தல்கள்:**

- ரிசர்வ் வங்கி அல்லது/ மற்றும் ஏதேனும் ஒழுங்குமுறை ஆணையம், அரசு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றோ அல்லது/மற்றும் நிதி முறைகேடு/மோசடி/சட்ட வழக்குகள் ஏற்பட்டால் மட்டுமே, வாடிக்கையாளர் தொடர்பான தகவல்களைப் பகிர்வதற்கும், பிற வங்கிகள் அல்லது நிதி அல்லது சட்டப்பூர்வ அல்லது ஒழுங்குமுறை அதிகாரிகளுடன் பிபிஐ பயன்படுத்துவது குறித்து பகிர்வதற்கும் வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார் மற்றும் உறுதியேற்கிறார். அத்தகைய அல்லது அவ்வாறு வாடிக்கையாளர்களின் தகவல்களை பகிர்வதற்கு இந்திய அரசு அல்லது நீதிமன்றங்கள் நமக்கு அறிவுறுத்துகிறது.
- நங்கள், வேறு ஏதேனும் வங்கியிடமோ அல்லது நிதி அல்லது சட்டப்பூர்வ அல்லது ஒழுங்குமுறை அதிகாரிகள், ஏதேனும் வாடிக்கையாளர் குற்றங்கள் விசாரிக்கும் அமைப்பிடம் ஏதேனும் நிதி முறைகேடு/மோசடி/சட்ட வழக்குகள் நடந்தால்/நடத்த, வேறு வங்கிகளுக்காகவோ மற்றும்/அல்லது பிபிஐ தவறான பயன்பாடு குறித்து நாங்கள் புகாரளிக்கலாம் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார் மற்றும் சம்மதிக்கிறார். மேலும் அவ்வகையான அமைப்புகளிடம் புகார் சம்மந்தமாக வாடிக்கையாளர்களின் தகவல்களை இந்திய அரசு மற்றும் நீதிமன்றங்கள் போன்றவற்றின் அறிவுறுத்தல்களின் படி பகிரப்படும் / பகிரப்படவேண்டும் என்பதை இங்கு ஏற்றுக்கொள்கிறார் மற்றும் சம்மதிக்கிறார். ரிசர்வ் வங்கி, ஏதேனும் ஒழுங்குமுறை ஆணையம், இந்திய அரசு அல்லது நீதிமன்றம் எங்களை வெளிப்படையாக அனுமதிக்கும் வரை, அத்தகைய வங்கிகள் அல்லது நிதி அல்லது சட்டப்பூர்வ அல்லது ஒழுங்குமுறை அதிகாரிகளின், நிதி நிறுவனத்தின் பெயரை

வெளிப்படுத்தவும் மேலும் விவரங்களை வாடிக்கையாளருக்கு வெளியிட நாங்கள் கடமைப்பட்டிருக்க மாட்டோம்.

- ரிசர்வ் வங்கி, நிதி ஒழுங்குமுறை ஆணையம், இந்திய அரசு, நீதிமன்றம் அறிவுறுத்தலின் படி, ஏதேனும் நிதி துஷ்பிரயோகம்/மோசடி/சட்ட வழக்குகள் ஏற்பட்டால் வாடிக்கையாளர் விவரங்கள் மற்றும் கட்டண வரலாறு தொடர்பான அனைத்துத் தகவல்களையும் எங்கள் குழு நிறுவனங்கள் அல்லது துணை நிறுவனங்களுடன் பரிமாறிக்கொள்ள, பகிர்ந்து கொள்ள வாடிக்கையாளர் எங்களுக்கும் எங்கள் முகவர்களுக்கும் இதன்மூலம் அங்கீகாரம் வழங்குகிறார்.

**ஆளும் சட்டம் மற்றும் அதிகார வரம்பு:**

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக எழும் அனைத்து தகராறுகளும்/ முரண்பாடுகள்/எதிர்ப்புகள், இந்திய சட்டங்களுக்கு இணங்க நிர்வகிக்கப்படும் மற்றும் கட்டுப்படுத்தப்படும் மற்றும் இந்தியாவின் மும்பையில் உள்ள நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களின் பிரத்யேக அதிகார வரம்பிற்கு உட்பட்டது.

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் திருத்தம்:**

- இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், அம்சங்கள் மற்றும் PPI-இல் வழங்கப்படும் பலன்களை மற்றும் கட்டணங்கள் மற்றும் அதுமட்டுமல்லாமல் மற்ற யாவுமான PPI சார்ந்த அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான முழு உரிமையும் எங்களிடம் மட்டுமே உள்ளது.
- திருத்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை எங்கள் வலைத்தளமான https://www.finobank.com/ இல் ஹோஸ்ட்/ போஸ்ட்/பதிவு /வெளிப்படுத்துவது - செய்வதன் மூலம் அல்லது எங்களால் தீர்மானிக்கப்பட்ட வேறு எந்த வகையிலும் நாங்கள் தொடர்பு கொள்வோம்.
- இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தவறாமல் தெரிந்து/பகுப்பாய்வு செய்து கொள்வதற்கு வாடிக்கையாளரே பொறுப்பாவார்.அதில் திருத்தங்கள் உட்பட அனைத்தும் அல்லது திருத்தங்கள் யாவும், எங்கள் இணையதளத்தில் வெளியிடப்படும் அவற்றை தெரிந்து மற்றும் PPI-ஐ தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் திருத்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

**வாடிக்கையாளர் குறைகளை நிவர்த்தி செய்தல்:**

- PPI மற்றும்/அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக ஏதேனும் தகராறு அல்லது குறைகள் அல்லது முரண் ஏற்பட்டால், வாடிக்கையாளர் இணையதளத்தில் உள்ள விவரங்களின் படி வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.
- பிபிஐ மற்றும்/அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான தகராறு அல்லது குறைகள் அல்லது முரண்கள் எங்களின் வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தால் போதுமான அளவு கவனிக்கப்படாவிட்டால் அல்லது தீர்க்கப்படாவிட்டால், வாடிக்கையாளர் நோடல் அதிகாரியை அணுகலாம், அதன் விவரங்களை எங்கள் இணையதளத்தில் காணலாம்.
- வாடிக்கையாளரால் எழுப்பப்படும் அனைத்து புகார்கள், தகராறுகள் அல்லது குறைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பரிசீலிக்கப்படும் மற்றும்/அல்லது தீர்க்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறோம்.
- வாடிக்கையாளர் எந்த நேரத்திலும் அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக வங்கிக் குறைதீர்ப்பாளரை அணுகலாம். இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளத்தில் அதாவது www.rbi.org.in இல் வங்கி குறைதீர்ப்பாளரின் பட்டியல் கிடைக்கிறது.